## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2015

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ், 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:** நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவினதும் வருமானமும் செலவினமும் தனித்தனியாக காட்டப்படுவதற்குப் பதிலாக நிறுவனத்தின் 06 பிரிவுகளின் தேறிய செயற்பாட்டு விளைவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ், 07 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:** நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொறி, ஆதனம் மற்றும் உபகரணத்திற்கான பெறுமானத்தேய்வுகள் அத்தகைய சொத்துக்களின் கொள்வனவுத் திகதியினை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனத்தின் கொள்கையின் பிரகாரம், பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு அத்தகைய சொத்துக்களின் கொள்வனவு ஆண்டு முழுவதற்குமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அகற்றல் ஆண்டிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலைகளுக்காக நேரடியாக பங்களித்திராத நிறுவனத்தின் புதிய தலைமையலுவலகத்திற்காக நிர்மாணித்த கட்டிடத்தின் நிர்மாணக் கிரயமாக ரூபா 1.44 மில்லியன் தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மதியுரைச் சேவைகள் மீது பெறப்பட்ட ரூபா 1.66 மில்லியன் தொகையான வருமானம் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவின் வருமானத்தின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக தலைமை அலுவலகத்தின் வருமானமாக தவறுதலாக கருதப்பட்டிருந்தது.

(இ) ரூபா 17.85 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் தலைமை

அலுவலகத்தின் செலவினமொன்றாக கருதப்படுவதற்குப் பதிலாக மண்சரிவு ஆராய்ச்சி இடர் முகாமைத்துவப் பிரிவின் செலவினங்களாக கருதப்பட்டிருந்தது.

**2.2.3 ஆவணச் சான்றின்மை**

-----------------------------------------

வழமையாக, பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட வருமானங்களில் மண்சரிவு இடர்களை குறைத்தல், மதியுரை வேலைகள் போன்றவற்றின் மீது அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்காக தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீடுகளில் இலாபம்/ மேந்தலை எல்லையை நிறுவனம் உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் அறவிடப்பட்ட இலாபம்/ மேந்தலை எல்லையின் விபரங்கள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. தொழில்சார் அமைப்புக்களால் பின்பற்றப்படுகின்ற செயற்திட்டங்களிற்கான நியமக் கட்டண அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தால் அளவு மதிப்பீடு, கேள்வி ஆவணங்களை தயாரித்து வழங்குதல், வேலை மேற்பார்வை, இணக்கப்பாட்டை சரிபார்த்தல் போன்றவற்றின் மீதான மேந்தலை செலவினங்கள் அறவிடப்படுகின்றதுடன் தணிப்பு நடவடிக்கையின் தன்மையின் பிரகாரம் இது தங்கியுள்ளது என நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

--------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிகநேரப் படிக்கு உரித்தற்ற 124 அலுவலர்களிற்கு ரூபா 3.99 மில்லியன் தொகையான மேலதிகநேரப் படி செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகத்தின் பிரகாரம், கட்டிட நிர்மாண வேலைத்தளங்கள், கட்டிட மூலப்பொருட்கள், நீர், மண் மற்றும் விசேடமாக மண்சரிவுகளை பரீட்சித்தல் என்பவற்றில் விசேட அறிவுத்திறனுடனான பதவியணி உறுப்பினர்களின் பற்றாக்குறையுடன் நிறுவனம் இயங்குகின்றது. ஆகையால், உடனடியாக பூர்த்திசெய்ய வேண்டிய நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு நிறுவனமானது பதவியணி உத்தியோகத்தர்களிற்கு மேலதிகநேரப் படிகளை வழங்குவதற்கும் அதேபோல் பதவியணியினரின் விலகல்களை குறைத்து அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பொது விடுமுறை தினங்களில் வேலைசெய்த பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கான விடுமுறை தினக் கொடுப்பனவுப் படியாக ரூபா 1.14 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஒக்தோபர் 13 இன் 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் வேண்டப்பட்டவாறு வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், வதிவிடத்திலிருந்து அலுவலகத்திற்கு போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்கு உரித்தற்ற 03 உத்தியோகத்தர்கள் 2015 மே 26 இன் பிஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 2015 செப்தெம்பர் வரை போக்குவரத்து வசதிகளை அனுபவித்திருந்தனர்.

(இ) 2015 மே 15 இன் 01/2015/01 ஆம் இலக்க பொது நிதித் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு முரணாக வெளிநாட்டுச் சுற்றுலாவுடன் தொடர்புடைய செயலமர்விற்கு ஏற்பட்டிருந்த அனைத்து செலவுகளையும் நிறுவனம் ஒழுங்குசெய்திருந்த போதிலும் 2015 ஒக்தோபர் 04 தொடக்கம் திசெம்பர் 12 வரை செயலமர்வில் பங்குபற்றிய அலுவலர் ரூபா 171,444 இடைநேர் படியை பெற்றிருந்தார்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 62.75 மில்லியன் மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 53.55 மில்லியன் மிகையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 9.20 மில்லியன் வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 5.28 மில்லியனால் அதிகரித்தமையும் வருமானம் ரூபா 3.92 மில்லியனால் குறைவடைந்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 234.64 மில்லியன் மற்றும் ரூபா 188.20 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் என்பவற்றைக் கூட்டிய பின்னர் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மேற்குறிப்பிட்ட செயற்பாட்டு விளைவுகள் முறையே ரூபா 288.19 மில்லியன் மற்றும் ரூபா 250.97 மில்லியன் சாதகமான நிலைமையிலிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அனர்த்தம் மீதான இடர்களைக் குறைத்து பாதுகாப்பான சுற்றாடல் நோக்கத்திற்காக தொழில்நுட்ப உதவியை வழங்குவதன் மூலம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும். மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் இந்த நோக்கத்தை அடைதல் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### (அ) மண்சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல்

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மண்சரிவு அபாயப் பிரதேசங்களில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்த தரப்பினர்களால் நிறுவனத்திடமிருந்து நேரடியாக அல்லது உரிய உள்ளூராட்சி சபைகளுடாக மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டும். அந்த நோக்கத்திற்காக, மண்சரிவு அபாயங்களினால் பாதிக்கப்படுகின்ற 10 மாவட்டங்களில் நிறுவனத்தால் அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அத்தகைய மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவதன் ஊடாக மீளாய்வாண்டின் போது ரூபா 24 மில்லியன் திறைசேரி மானியங்கள் உள்ளடங்கலாக ரூபா 38.6 மில்லியன் தொகை உழைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறிப்பிட்ட அறிக்கைகளை வழங்குதல் மீது பிரதேச சபைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.51 மில்லியன் மொத்தத் தொகையில் 2015 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 1.07 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்காமையானது காலரீதியில் பிரதேச சபைகளிலிருந்து பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு ஸ்தாபிக்கப்பட்ட பொறிமுறை முறையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

(ii) கிடைத்த தகவலின் பிரகாரம், மண்சரிவு அபாயப் பிரதேசங்களில் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திகளிற்காக அறிக்கைகள் மற்றும் அங்கீகாரங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்போதிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் 45,563 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் 42,775 விண்ணப்பங்கள் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களை பின்தொடர்வதற்கு நிறுவனத்தால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விளக்கமளிக்கப்பட்டவாறு ஏதேனும் அனுமதியற்ற நிர்மாணங்களை நிறுத்துவதற்கு அல்லது பிழையான தரப்பினர்களுக்கெதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனம் அதிகாரத்தை கொண்டிருக்காத அதேநேரம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை அவ்வாறு செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், நிறுவனம் ஆபத்து வரைபடங்களில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் தளங்களை குறிப்பிடவும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் பதிவேடொன்றை பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது.

**(ஆ) மண்சரிவு அபாயங்களைக் தணித்தல் மீதான நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கொரன்டியெல்ல மண்சரிவு அபாயத்தைத் தணிப்புச் செயற்திட்டம்**

இந்த செயற்திட்டத்தின் கீழ் மண்சரிவு உயர் அபாயங்களை எதிர்நோக்குகின்ற 50 வீடுகளை மீட்டல், மண் நிரப்புதல், சில ஏனைய பிரதேசத்திற்கு உடைந்துவரும் சிதைவுகளை திருப்புவதற்கு அணையொன்றை நிர்மாணித்தல் மற்றும் சில பிரதான வீதிகளை மீளநிர்மாணித்தல் போன்ற நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தன. செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 93.01 மில்லியன் கிரயத்திலான வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பாக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 35.50 மில்லியன் கிரயத்தில் மாத்திரமே வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 11.90 மில்லியன் பெறுமதியான வேலைகள் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், தணிப்புச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு 2015 நவம்பர் 09 இல் வேண்டுகோளொன்றை நுவரெலியா மாவட்டச் செயலாளர் மேற்கொண்டிருந்தார் என அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விளக்கமளிக்கப்பட்டவாறு, தளமானது எதிர்பாராத புவியியல் முரண்பாடுகளுடனான உயர் மழைவீழ்ச்சிப் பிரதேசத்தில் அமைந்திருந்தமையால் வடிகால் முறைமையின் நிர்மாணம் காலதாமதங்களை காண்பித்திருந்தது. தணிப்புக் காலப்பகுதியின் போது தளமானது நில அசைவுகளுக்கு உட்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக, வடிவமைப்புக்கள், நிர்மாணப் பட்டியல்கள் மற்றும் அவற்றின் மீதான கிரய மதிப்பீடு என்பன மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2016 ஆகஸ்ட் இறுதியளவில் தணிப்பு வேலைகளை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

(ii) **பெஷன்வத்தை மண்சரிவு தணிப்புச் செயற்திட்டம்**

மேற்படி செயற்திட்டத்தின் கீழான தணிப்பு வேலைகள் 2014 இலிருந்து தொடரப்பட்டிருந்ததுடன் 2015 யூலையில் செயற்திட்டத்தின முதலாம் கட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 2016 சனவரி 31 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென இணங்கப்பட்ட செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் 2016 யூன் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. பிரதேசத்தில் நிலவிய அசாதாரணமான காலநிலை நிலைமை, இயந்திரங்கள், முலப்பொருட்களின் போக்குவரத்திலுள்ள தடைகள் மற்றும் தொழிலாளர் படையணியின் பற்றாக்குறை என்பவற்றின் விளைவாக செயற்திட்டத்தின் II ஆம் கட்டம் மெதுவான செயன்முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது என பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

(இ) **பாடசாலைகளில் அமுல்ப்படுத்தப்பட்ட மண்சரிவு தணிப்புச் செயற்திட்டங்கள்**

14 பாடசாலைகளில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மண்சரிவு தணிப்புக்களிற்கான நிர்மாண வேலைகளில் டிக்வெல்லவிலுள்ள வட்டுகந்த மகா வித்தியாலயம், உடகம்பிற்றிய மகா வித்தியாலயம், ஓவிற்றிகம மகா வித்தியாலயம் மற்றும் விஜிதா மகா வித்தியாலயம் என்பவற்றின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட காலநிலையிலிருந்து மீண்டெழும் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் மேலும் 18 பாடசாலைகளின் மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகள் மீது மதியுரை சேவைகளை வழங்குவதற்காக உடன்படிக்கையொன்றை நிறுவனம் கைச்சாத்திட்டிருந்தது. அவற்றில் 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் 04 பாடசாலைகளின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த அதேநேரம் ஒப்பந்ததாரர்களை தெரிவுசெய்தல் மற்றும் விலைமனு மதிப்பீடு போன்றன உள்ளடங்கலான மதியுரை சேவைகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்படாதிருந்தன.

(ஈ) **காலநிலையிலிருந்து மீண்டெழுதலை மேம்படுத்தல்**

கண்டி – மஹியங்கனை வீதியின் 16 பிரிவுகளில் நிலையற்ற சரிவுகளின் மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகள் மீது மதியுரை சேவைகளை வழங்குவதற்கு உடன்படிக்கையொன்றை நிறுவனம் கைச்சாத்திட்டிருந்தது. பெறப்பட்ட தகவலின் பிரகாரம், வீதிகளின் பல பிரிவுகளின் பௌதீகரீதியான செயன்முன்னேற்றம் 4.2 சதவீதத்தில் மாத்திரம் இருந்த அதேநேரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 75 சதவீதமாக இருந்ததுடன் வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தன.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 350 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நிறுவனத்திற்கான தலைமையலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 100 மில்லியன் தொகையான மூலதன மானியம் பொதுத் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிர்மாணத்திற்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 350 மில்லியனாக இருந்த போதிலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம்

வழிகாட்டியால் வேண்டப்பட்டவாறு அமைச்சரவை அங்கீகரித்த கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக, வரிசை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 45.28 மில்லியன் கிரயத்தில் தூண் வேலைகளிற்காக 2015 திசெம்பர் 29 இல் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2016 மார்ச் 29 இல் ஆரம்பிக்கப்பட்ட தூண் வேலைகள் 2016 யூன் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ரூபா 8.12 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடாமல் 2015 திசெம்பர் 30 இல் செலுத்தப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணம் தூண் வேலைகள் ஆரம்பிக்கப்படாதமை காரணமாக 03 மாதங்களிற்கு மேலாக தீர்ப்பனவுசெய்யப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் 03 மோட்டார் வாகனங்களின் விலை மதிப்பீடு வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டதனாலும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு 08 நாட்கள் மாத்திரமான போதியளவற்ற காலப்பகுதி வழங்கப்பட்டிருந்ததனாலும் அத்தகைய வாகனங்களை அகற்றுவதற்காக பிரயோகிக்கப்பட்ட நடைமுறை வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

முன்னைய ஆண்டின் இறுதியில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது விஞ்ஞானிகள் பதவிகளிற்காக 35 நபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமில்லாமல் ஒப்பந்த மற்றும் செயற்பணி அடிப்படையின் கீழ் 31 நபர்கள் தற்போதும் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்**

கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் மண் ஆராய்ச்சி ஆய்வுகூடம் போன்ற சில ஏனைய நிறுவகங்களுக்கு உரித்தான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தனியான நிறுவகமொன்றை ஸ்தாபிப்பதற்காக, 1993 செப்தெம்பர் 29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் கீழ் நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டிராததால் நிர்மாண நோக்கங்களிற்காக நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்குரியதாகவுள்ளது. மேலும் ஆபத்தான பகுதிகளில் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களுக்கெதிராக நிறுவனத்தால் எடுக்கப்படவேண்டிய பின்தொடர் நடவடிக்கைகள் மீதான சந்தர்ப்பங்கள் மிகவும் வரையறுக்கப்பட்டிருந்தன.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிறுவனத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நிதி இலக்குகளை மாத்திரம் அடைவதற்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகையால் அனர்த்த அபாய வலயங்களை வரைபடத்தில் குறித்தல் மற்றும் மண்சரிவுகளைக் குறைப்பதற்காக செய்யப்பட்ட நிர்மாண வேலைகள் போன்றன தொடர்பான பௌதீகச் செயலாற்றலை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியாதிருந்தது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரைக் கொண்டிருந்ததுடன் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொழிற்பாடுகளை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், பௌதீகச் செயலாற்றலின் அடைதல் மீதான செயன்முன்னேற்றம் போன்றன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(ஆ) பிரிவு மற்றும் 2011 சனவரி 27 இன் பிஈடி 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நிறுவனமானது ரூபா 149.24 மில்லியனான அதன் மிகை நிதிகளை நிலையான வைப்புக்களில் முதலீடுசெய்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான தொகைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீட்டிற்கான நிதிசார் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் வருமானம் மற்றும் செலவின இலக்குகளை எதிர்கொள்வதற்கும் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் பரப்புக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | செயற்பாட்டுப் பரப்புக்கள் | பெதுவான பலவீனங்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர்கள் மீதான கட்டுப்பாடு | நீண்டகால நிலுவை மீதிகள் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் |
| (ஆ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | பிரதான பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல் |
| (இ) | செயற்திட்ட முகாமைத்துவம் | தாமதமில்லாமல் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல் |